இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

சகோதரர் சகோதரிகளே, உண்மையானவை எவையோ, கண்ணியமானவை எவையோ, நேர்மையானவை எவையோ, தூய்மையானவை எவையோ, விரும்பத்தக்கவை எவையோ, பாராட்டுதற்கு உரியவை எவையோ, நற்பண்புடையவை எவையோ, போற்றுதற்குரியவை எவையோ, அவற்றையே மனத்தில் இருத்துங்கள். நீங்கள் என்னிடம் கற்றுக்கொண்டவை, என் வழியாய்ப் பெற்றுக்கொண்டவை, என்னிடம் கேட்டறிந்தவை, என் வாழ்வில் நீங்கள் கண்டுணர்ந்தவை யாவற்றையும் கடைப்பிடியுங்கள். அப்போது அமைதியை அருளும் கடவுள் உங்களோடு இருப்பார். (பிலி 4: 8-9)

# தூக்கி எறியும் கலாச்சாரம் அனைவருக்கும் தீங்கு விளைவிக்கும்

## திருத்தந்தை அறிவுறுத்து

வத்திக்கான் : இயற்கை வளங்களை முறையற்ற வகையில் பயன்படுத்தும் கலாச்சாரம், இயற்கையுடன் இணைந்து முழு வளர்ச்சிக்கு இட்டுச் செல்லாது, அதை வாழ விடாது என்றும், இத்தகைய பயன்படுத்தி தூக்கி எறியப்படும் கலாச்சாரம் நம் அனைவருக்கும் தீங்கு விளைவிக்கும் என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

செப்டம்பர் 21, வியாழன் அன்று வத்திக்கானின் கிளமெந்தினா அறையில் இலத்தீன் அமெரிக்க பல்கலைக்கழகத் தலைவர்கள் ஏறக்குறைய 200 பேரை சந்தித்து உரையாற்றிய போது இவ்வாறு கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இடம்பெயர்வு, காலநிலை மாற்றம் ஆகியவற்றைக் குறித்தும் அவர்களோடுக் கலந்துரையாடினார்.

பருவநிலை மாற்றம், இடம்பெயர்வு, தூக்கி எறியப்படும் கலாச்சாரம் போன்ற கல்வியாளர்களால் எழுப்பப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் பற்றிய கேள்விகளுக்குப் பதிலளித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இன்றைய யதார்த்தங்கள் மற்றும் சவால்களில் இருந்து தொடங்கி இளைஞர்களுக்குப் பயிற்சி அளிப்பதில் ஆக்கப்பூர்வமாக இருக்குமாறு அவர்களை வலியுறுத்தினார்.

சுற்றுப்புறச்சூழல் மற்றும் தட்பவெப்பநிலை தொடர்பான பிரச்சினைகள் குறித்து கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளித்த திருத்தந்தை அவர்கள், பயன்படுத்தி தூக்கி



திருத்தந்தை பிரான்சிஸ் இலத்தீன் அமெரிக்க பல்கலைக்கழகத் தலைவர்கள் உடன்

எறியப்படும் கலாச்சாரம் கைவிடப்பட்ட கலாச்சாரம் என்பதை அடிக்கோடிட்டுக் காட்டி, தனது அடுத்த திருத்தூது மடலின் தலைப்பு "Laudate Deum" (ஆண்டவரே உமக்கே புகழ் என்றும் கூறினார்.

எஞ்சியிருக்கும் பொருட்களைப் பயன்படுத்துதல், அவற்றை மீண்டும் உருவாக்குதல், பொதுவான பயன்பாட்டின் வரிசையில் அவற்றை மாற்றுதல் போன்றவற்றில் கல்வியின் பற்றாக்குறை உள்ளது என்று சுட்டிக்காட்டிய திருத்தந்தை அவர்கள், இந்த பயன்படுத்தி தூக்கி எறியும் கலாச்சாரம் மனிதர்கள் மீதும் இயற்கையின் மீதும் விளைவுகளை ஏற்படுத்துகின்றது என்றும் கூறினார்.

மனிதகுலம் இயற்கையின் இந்த முறையற்ற பயன்பாட்டால் சோர்வடைந்துள்ளது என்று கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இயற்கையின் நல்ல பயன்பாட்டுப்பாதைக்கு திரும்ப வேண்டும் என்றும், இயற்கையை முறையாகப் பயன்படுத்த அதனுடன் உரையாடல் மேற்கொள்ள வேண்டும் என்றும் கூறினார்.

புலம்பெயர்ந்தோர் தொடர்பான பிரச்சனை தன் இதயத்திற்கு மிகவும் நெருக்கமானது என்று கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மூன்று மனித மொழிகளான தலை, இதயம் மற்றும் கைகளின் மொழி மிகவும் அவசியம் என்றும் இதனை சிறார் மற்றும் இளையோர்க்கு எடுத்துரைக்க வேண்டும் என்றும் கல்வியாளர்களிடத்தில் கேட்டுக்கொண்டார்.

கல்வியாளர்கள் தகவல்களை வழங்குபவர்கள் மட்டுமல்ல என்று கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சிறார் மற்றும் இளையோர் தாங்கள் என்ன செய்கின்றார்கள் எப்படி செய்கின்றார்கள், என்பதைக் கண்டறிந்து செயல்களை செய்ய வேண்டும் என்றும், உண்மை மற்றும் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் ஆக்கப்பூர்வமாக இருக்க அவர்களுக்கு உதவ வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

*மெரினா ராஜ் – வத்திக்கான்*

# ‘உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்வதாக’ ஈப்போவில் தியானம் நடைபெற்றது

ஈப்போ: புனித லூர்து மாதா தேவாலயத்தின் பங்கு தந்தை அருட்பணி ரோபர்ட் டேனியல் அவர்களின் ஏற்பாட்டில் ஐந்து நாட்கள் தியானம் கடந்த 18.9.23 முதல் 22.9.23 வரை இறையாசீரோடு சிறப்பாக நடந்தேறியது. இதில் 157 பங்கு மக்கள் பங்கேற்றனர். ஜோகூர், மாசாய் புனித குழந்தை திரேசா தேவாலய பங்கு தந்தை அருள்பணி சிரில் மண்ணாயகம் அவர்கள் இத்தியானத்தைப் பக்திமுயற்சியோடும் உற்சாகத்தோடும் ‘உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்வதாக ‘ (மத் 5:16 ) எனும் கருப்பொருளில் வழிநடத்தினார்.

முதல் நாள் 'நான் என்னை எவ்வாறு இத்தியானத்திற்கு தாயாரிப்பது, ஏன் நான் இத்தியானத்தை மேற்கொள்கிறேன்' எனும் துணைத்தலைப்பில் தியானம் மையமிட்டிருந்தது. நற்கருணையில் ஆண்டவரின் உடனிருப்பை நான் உணர்கிறேனா? என்பதோடு, பவுல் அடிகள் எவ்வாறு இயேசுவை உணர்ந்தார் என்பதையும், நமது வாழ்வில் இறைவேண்டலின் மகத்துவத்தையும் எடுத்தியம்பினார். புனித லொயோலா இஞ்ஞாசியாரின் கூற்றுப்படி இறைவேண்டலானது பலவகையான உணர்வுகளை தூண்டும் நேரமாகவும், அமைதியை, ஆறுதலை அளிப்பதோடு, மகிழ்வை உணர்த்தும் ஒன்றாக உள்ளது என்றார்.

எது எவ்வாறு இருப்பினும் 'சிலுவை யோவானின் கருத்துப்படி, வெறுப்போ ஆறுதலோ எந்த சூழ்நிலையிலும் நாம் இறைவேண்டலை நிறுத்திவிடக்கூடாது என்றும், இறைவார்த்தையை வாசித்து அதனை உணர்ந்து தியானிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

தொடர்ந்து, தியானத்தின் போது, பேச்சு குறைப்பும் அமைதியை கடைப்பிடித்தலும் இன்றியமையாதது என்று அறிவுறுத்தினார். இந்நிலையில்தான் கடவுள் நம்மோடு பேசுவதை உணர முடியும் என்றும், இறைவேண்டலோடு செயல்பாடும் இருக்க வேண்டும் என்பதையும் தெளிவுப்படுத்தினார். அடுத்து, எவ்வாறு தியானம் செய்யவேண்டுமென சிறு பயிற்சியை அவர் வழங்கினார்.

இரண்டாம் நாள் தியானம் 'கடவுள் யார்' என்ற தலைப்பில் ஆரம்பமானது. நமது கடவுள் மூவொரு கடவுள். ஆள்வகையில் மூவர், செயல்பாட்டில் ஒருவரே. ஒரே ஞானம், ஒரே ஆற்றல், ஒரே தேவசுபாவம் கொண்டது நமது மூவொரு கடவுள்



நம்பிக்கை என்றார். இது நமது நம்பிக்கைக்கு அடிப்படையாகும். கடவுளே நமது வாழ்வின் மையம். விதைப்பவன் உவமையின் வழி, பல நிலையில் உள்ள மனிதர்களை விவரித்தார் அருள்தந்தை.

உவமைகளின் வழி இயேசு தந்தையை தெளிவுபடுத்துகிறார். கடவுள் தாராள உள்ளம் கொண்டவர். அன்பும் இரக்கமும் நிறைந்தவர். கடவுள் நம் வாழ்விற்கு எத்தகைய அடித்தளத்தைக் கொண்டுள்ளார்? பாறையாகவா அல்லது மணலாகவா? என்பது பற்றி சிந்திக்கத் தூண்டினார். கடவுள் நம் மீது அன்பு கொண்டுள்ளார் நாம் அவரின் அன்பார்ந்த பிள்ளைகள். இதுவே நமது அடையாளம். எனவே, கடவுளை நாம் சிந்தை அளவில் மட்டும் அறியாமல், இதயபூர்வமாக அறிந்திட வேண்டும். கடவுள் நம்முள் குடிகொண்டுள்ளார், நற்கருணை வடிவில் நம்மில் வருகின்றார் என்பதை வலியுறத்தினார்.

தொடர்ச்சி, அடுத்தப் பக்கம்

# ‘உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்வதாக’ ஈப்போவில் தியானம் நடைபெற்றது (முதல் பக்கத் தொடர்ச்சி)

மூன்றாம் நாள் தியானத்தில், 'கடவுள் எனக்கு யார், நான் எதற்காக பிறந்தேன்' என்ற தலைப்பில் எசாயா 43:1-7ஐ வாசித்து, எந்த சூழ்நிலையிலும் கடவுள் நம்மை காத்தருள்வார் என விவரித்தார் அருள்தந்தை சிரில் “ நான் எப்பொழுது பிறந்தேன். எதற்காக பிறந்தேன். என் வாழ்வின் அர்த்தம் என்ன? என் வாழ்வின் இலக்கு என்ன?” போன்ற கேள்விகளால் பங்கேற்றோரை ஆழச் சிந்திக்கச் செய்தார். நமது இலக்கு எதையாவது சாதிப்பதாகும். எனவே, நாம் கல்லறைக்கு செல்வதற்கு முன்பாக நமது வாழ்வின் அர்த்தத்தை புரிந்துக்கொள்ளாமல் செல்வோமா? என்ற கேள்விகனையை தொடுத்தார்.

நான்காம் நாள் தியானத்தில், 'என்னை நான் அறிந்துக்கொள்ளுதல்' என்பது மையமாக அமைந்தது. முதலில் நம்மை நாம் புரிந்துக்கொள்ள வேண்டும். நம்மை தேடுவது என்பது ஒரு பயணம்; தேடுதல் இருக்கும் வரை வாழ்க்கை என்பது அர்த்தமுள்ளதாகும். மேலும், வாழ்வில் எது நல்லது கெட்டதென உய்த்துணர முடியும். எனவே, முதலில் நமது உடற்கூற்றை அறிதல் வேண்டும் என்றார்.

1) நம் உடலுக்காக: கடவுளுக்கு நன்றி செலுத்த வேண்டும், உடலுக்கு மதிப்பளிக்க வேண்டும், பாதுகாக்க வேண்டும், அன்பு செய்ய வேண்டும், உடல் என்பது ஓர் ஆலயம். அது கூறும் ஒவ்வொரு அறிகுறிகளுக்கும் நாம் மதிப்பளிக்க வேண்டும்.

2) மூளை - அறிவுத்திறன் : நான் அறிவு திறன் உடையவனா, எனது அறிவாற்றலை உணர்ந்து பாராட்டியுள்ளேனா, என் அறிவுத்திறனை அறிந்துள்ளேனா, எனது அறிவுத்திறனை பிறரோடு ஒப்பிடுகிறேனா. இவற்றை ஆய்ந்து நான் கடவுளுக்கு நன்றிக்கூறுகின்றேனா?

3) பாலுணர்வு : உடலின் ஓர் அங்கம். நான் ஒரு பாலுணர்வு கொண்ட நபர், எனது பாலியலை பாராட்டுகிறேனா. பாலியல் நான் யார் என உணர்த்துகிறது? அது ஓர் உறவுக்கான பாலியல். அதற்கு மதிப்பளிக்க வேண்டும். ஏனெனில் நாம் அனைவரும் கடவுளின் பார்வையில் தனித்துவம் வாய்ந்தவர்கள்.

ஐந்தாம் நாள் தியானம். இறுதி நாள் ஆகையால் மறைதந்தை அவர்கள் சிறு மீள்பார்வை செய்தார். (உடல், மூளை, பாலுணர்வு, உணர்வு, சமூக கலாச்சாரம்) பின் நம் உடலின் நான்காம் நிலையினை விவரித்தார்.

4) உணர்வு : எனக்கு உணர்வு உள்ளது. நாம் அனைவரும் உணர்ச்சி நிறைந்த மக்கள். என் உணர்வை என்னால் கையாள முடிகிறதா. எந்த உணர்வு என்னை வாட்டுகிறது. மற்றும் உணர்வுகள் நிறைய குழப்பத்தை அளிக்கும். அதனை முறையாக வெளிப்படுத்த வேண்டும். உணர்வு ஓங்கி இருக்கும் போது எந்த முடிவும் எடுக்க கூடாது என பல மாதிரிகள் கூறி விவரித்தார் மறைதந்தை.

5) சமூக கலாச்சாரம் : நான் ஒரு சமூக கலாச்சாரம் உள்ள நபரா. என்னால் தனப்பட்ட முறையில் வாழ முடியுமா அல்லது சமுதாயம் தேவையா? ஆம் உறவு இல்லாமல் வாழ முடியாது. மேலும், நமது கலாச்சாரமான உடை, மொழி, உணவு, கலை யாவும் நம் வாழ்வின் ஓர் அங்கம். இவையனைத்தும் கடவுளால் அருளப் பட்டது என இனிதே கூறி தமது விளக்கத்தை முடித்தார். நிறைவாக அருங்கொடை பாடல்களோடு, பக்தி முயற்சியோடு நிறைவேறியது பொருள் நிறைந்த தியானம். இறுதியில் அனைவரும் உலகின் ஒளியாக மிளிர்வதற்கு ஆசீர்வதிக்கப்பட்ட மெழுகுத்திரி வழங்கப்பட்டது.

இதில் பங்கேற்ற இளைஞரான சகோதரர் எண்ட்ரு அவர்கள் ஆலயம் ஏற்பாடு செய்த இந்த தியானம் தனக்கு ஒரு விழிப்புணர்வையும், தன்னை உணரும் நிலையையும், ஒரு மாற்றத்தையும் ஏற்படுத்தி ஓர் ஆன்மீக உணவாக அமைந்தது என மகிழ்வோடு கூறினார். மேலும் இந்த ஐந்து நாள் ஆன்மீக பயணத்தில், மறைதந்தை கூறிய ஒவ்வொன்றும் பசுமரத்தாணிப்போல் உள்ளத்தில் பதிந்ததாக, புதுப்பிக்கப்பட்ட நபராக செல்கிறேன் என எடுத்துரைத்தார். இந்த தியானத்தில் பங்களிப்பு அளித்த அனைவருக்கும், ஏற்பாடு செய்த பங்குத்தந்தைக்கும் இறுதியில் நன்றி கூறப்பட்டது.

*இரா.குளோரியா மெத்யூஸ் புனித லூர்து அன்னை தேவாலயம், ஈப்போ.*

## புனித ஆரோக்கிய அனுனை திருவிழா, ஜொகூர் பாரு

: இங்குள்ள அமல உற்பவி தேவாலயத்தில் (CIC) புனித ஆரோக்கிய அன்னையின் வருடாந்திர வேளாங்கண்ணி திருவிழா கடந்த செப்டம்பர் 17ம் நாள் ஞாயிற்றுக்கிழமை அன்று அன்னையின் நவநாள் செபம், திருப்பலி கொண்டாட்டம், ஊர்வலத்துடன் அனைத்து பக்தர்களுக்கும் இரவு விருந்து உபசரிப்புடன் சிறப்பாக நடைபெற்றது. இந்த திருவிழா கொண்டாட்டம் செகாமாட் புனித பிலிப் தேவாலயத்தைச் சேர்ந்த அருள்பணி ஆண்ட்ரூ ஆரோக்கியசாமி மற்றும் பங்குத்தந்தை எட்வர்ட் ராயப்பன் மற்றும் உதவி பங்குத்தந்தை கிளாரன்ஸ் மோட்டோயு ஆகியோர் இணைந்து விழாவைக் கொண்டாடினர்.

- செப்டம்பர் 8 முதல் 17 வரையிலான 9 நாட்கள் அன்னைக்கு நவநாள் செபமும் திருப்பலியும் கொண்டாடப்பட்டது.

- திருவிழா தொடக்க நாளன்று அருள்பணி ஜேம்ஸ் ராஜேந்திரன் அவர்கள் கொடியேற்றத்துடன் முதல் நாள் நவநாள் மற்றும் திருப்பலி நிறைவேற்றினார்.

- தொடர்ந்து ஒவ்வொரு நவநாள் செபமும் திருப்பலியும் அருள்பணி ஜேம்ஸ் ராஜேந்திரன், பேரருட்தந்தை மைக்கல் மண்ணாநாயகம் மற்றும் அருள்பணி ஆண்ட்ரூ ஆரோக்கியசாமி ஆகியோரால் நிறைவேற்றப்பட்டது.

- திருவிழா நாளன்று, மொத்தம் 1000 பேர் கலந்து கொண்டனர் என்று பங்கு பேரவை தலைவர் சகோதரர் ஸ்டீவ் குழந்தைசாமி கூறுகிறார்.

- தெற்கு ஜொகூர் மறைவட்டத்தில் உள்ள மற்ற பங்குகளான திருக்குடும்ப தேவாலயம் உலு திராம், கிறிஸ்து அரசர் தேவாலயம் குலாய், புனித தெரசா தேவாலயம் செயின்ட் மாசாய் மற்றும் இறை இரக்க தேவாலயம், ஸ்குடாய் ஆகியவற்றின் பங்கு மக்களும் கலந்து கொண்டனர்.

- இந்த திருவிழா தயாரிப்புகள் அனைத்தும் ஒரு மாதத்திற்கு மேலாக நடைபெற்றது.

- பங்கு மக்கள் சிலர் மற்றும் சிங்கப்பூர் நிறுவனத்தைச் சேர்ந்த சில நல்ல நன்கொடையாளர்கள் உணவு அனைத் திற்கும் தேவையான நிதியை வழங்கினர்.

- முதல் முறையாக வேளாங்கண்ணி தமிழ் திருவிழா திருப்பலி ஆனது CIC JB You Tube இணைப்பில் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது.

பங்குத்தந்தை அருள்பணி எட்வர்ட் ராயப்பன் இந்த ஆண்டு திருவிழா தினம் சிறப்பாக நடைபெற்றதற்கு தன் மன நிறைவுடன் இறைவனுக்கு தனது நன்றியையும் பங்கு பொறுப்பாளர்கள் மற்றும் மக்களுக்கு பாராட்டுதலையும் தெரிவித்தார்.

*தமிழாக்கம்: த. ஜோசப் சகாய ஆனந்த், மலாக்கா*



## 16வது உலக ஆயர்கள் மாமன்றம் (முதல் அமர்வு)

“திருஅவையின் ஒருங்கிணைந்த பயணம்” என்ற தலைப்பில் அடுத்த வாரம், அக்டோபர் மாதம் 4 முதல் 29 வரை 16வது உலக ஆயர்கள் மாமநாட்டின் முதல் அமர்வு நடைபெறுகிறது. இங்கு விவாதித்து ஏற்றுக்கொள்ளப்படும் தீர்மானங்கள், அடுத்தாண்டு நடைபெறும் இறுதி மாநாட்டில் மறுவுறுதி செய்யப்பட்டு ஆவணங்களாக வெளியிடப்படும்.

# பலன் தரும் சீடர்களாவோம்

இன்று ஆண்டின் பொதுக்காலம் 27ம் ஞாயிறுவில் இணைந்துள்ள நாம் பலன் கொடாது, கொடியவர்களாய் மாறும் மனிதர்கள் அழிவை சந்திப்பார்கள். மனிதனின் நம்பகத்தன்மை சாரமற்று போகும் போது, எந்த மனிதனும், அவன் நிலையில் இருந்து தள்ளப்படுவான். பலன் கொடுத்து உண்மையாய் வாழ்வதுவே உயர் வாழ்வாகும். அதுவே கிறிஸ்தவ வாழ்வாகும் என்பது குறித்து சிந்திக்க அழைக்கப் படுகிறோம்.

இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய முதல் வாசகத்தில் எசாயா இறைவாக்கினர் இஸ்ரயேல் மக்களை திராட்சைத் தோட்டத்திற்கு ஒப்பிடுகிறார். கடவுள் இஸ்ரயேல் மக்களை அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து மீட்டுக்கொண்டு வந்து, பாலும் தேனும் பொழியக்கூடிய கானான் தேசத்தை வழங்கினார். அவர்களை வழிநடத்துவ தற்காக இறைவாக்கினர்கள், நீதித்தலைவர் கள், அரசர்களைத் தந்தார். அப்படி யிருந்தும் அவர்கள் உண்மைக் கடவுளுக்குக் கீழ்ப்படியாமல் போலிதெய் வங்களை வழிபட்டார்கள். அதனால் கடவுள் சினம்கொண்டு அவர்களை தண்டிக்கின்றார், அந்நியர்களால் நாடு கடத்தப்பட அனுமதித்தார்.

தூய பவுல் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத் திலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய இரண்டாம் வாசகத்தில், நாம் நமக்கு உகந்த காரியங்களை அல்ல, கடவுளுக்கு உகந்த காரியங்களைச் செய்கின்றபோது தான் கடவுளின் ஆசிர்வாதம் உண்டு என்பதுதான் பவுலடியாரின் ஆழமான செய்தியாக இருக்கின்றது.

இன்றைய நற்செய்தி வாசகத்தில் இயேசு கூறும் உவமையில் ஒருவர் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை சரிவரச் செய்யவேண்டும், அப்படி இல்லையென்றால் அவர் சரியான தண்டனை பெறுவார் என்பதை இயேசு கூறும் இந்த கொடிய திராட்சைத் தோட்டப் பணியாளர்கள் உவமையானது நமக்கு எடுத்துக்கூறுகிறது. உவமையில் வரும் திராட்சைத் தோட்டம்தான் நாம். எப்படி நிலக்கிழார் திராட்சைத் தோட்டத்தை வேலி போட்டு, பிழிவுக்குழி காவல்மாடம் அமைத்து நன்றாக பராமரிக்கிறாரோ அது போன்றுதான் கடவுளும் நமக்கு பல்வேறு வசதி வாய்ப்புகளைத் தந்து, நமக்கு நல்ல பெற்றோர், நல்ல இயற்கைச் சூழல், நல்ல உடல்நலம் இப்படிப் பல்வேறு ஆசிகளை வழங்குகின்றார். இப்படியெல்லாம் பாதுகாத்துப் பராமரிக்கும் கடவுளுக்கு நாம் தகுந்த பலனைத் தரவில்லை என்றால் அது நம்மேல் நாமே சாபத்தை வருவித்துக் கொள்வதற்குச் சமமாகும். இறைவன் நம்மைப் பல்வேறு ஆசிகளால் நிரப்பியிருக்கின்றார் எனில், நம்மிடமிருந்து உரிய பலனை, உரிய காலத்தில் எதிர் பார்ப்பது முறை; நாமும் உரிய பலனை உரிய காலத்தில் தருவது நம்முடைய கடமை. அதைவிடுத்துப் பலனைத் தராமல், தம்முடைய விருப்பத்திற்கேற்றாற்போல் நடந்தால், முடிவில் நமக்குக் கொடிய குத்தகைக்காரர்களுக்கு ஏற்பட்ட நிலை தான் ஏற்படும். ஆகவே, நாம் ஒவ்வொருவரும் உரிய காலத்தில் பலன்தரக்கூடியவர்களாக மாறவேண்டும்.

வாழ்வின் எல்லாக் கணத்திலும் நன்மையான காரியங்களை மட்டும் நாடுவோம். அப்பொழுது நன்மையை அருளும் கடவுள் நமக்கு நன்மையானதைச் செய்வார். “வாழ்க்கை என்பது தன்னிடம் உள்ளதைப் பிறருக்குக் கொடுப்பது, அடுத்தவரிடமிருந்து எதையும் எடுப்பது அன்று” என்று. ஆம், மனிதராகப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் மிகுந்த கனியை, பலனைத் தரவேண்டும். அதுதான் அர்த்த முள்ள வாழ்வாகும்.

*த. ஜோசப் சகாய ஆனந்த், மலாக்கா*

**ஆண்டின் பொதுக்காலம் 27ம்- ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | எசா 5: 1-7 |
| தி.பா | 80:8,11.12-13.14-15.18-19 |
| 2-ம் வாசகம் | பிலி. 4: 6-9 |
| நற்செய்தி | மத். 21: 33-43 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை- வாரம் 2**